**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.43/2015**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகன் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : மணவூர் |
| தொழில் | : ரயில்வே ஓய்வு | வட்டம் | : திருத்தணி |

**10.09.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

17. பொதுவாக ஒப்படைப்பு பட்டாவை அதற்காக உள்ள தனிவட்டாட்சியர்தான் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 6ல் தனிவட்டாட்சியரின் முத்திரை உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ 6ன் கையெழுத்திற்கு கீழே வட்டாட்சியர் என்றுதான் உள்ளது என்றாலும் தனிவட்டாட்சியர் என்று இல்லை என்றாலும் கோபுர முத்திரையில் தனிவட்டாட்சியர் என உள்ளது. வா.சா.ஆ 6ல் உள்ள இரண்டு கையெழுத்துக்களும் வேறு வேறு மையினால் உள்ளது என்றால் அது வட்டாட்சியர் அலுவலகத்தில் போடப்பட்ட கையெழுத்துக்கள்தான். எனக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்துக்கள் எனக்கு உள்ளதா என்றால் வேறு நிலம் இல்லை.

18. வா.சா.ஆ 6ல் உள்ள நிபந்தனைகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அந்த விவரம் குறித்து தெரியாது. புல எண்.184/21, 22 ஆகிய இரண்டுமே சாலை புறம்போக்காக இருந்தது என்றால் புல எண்.184/21தான் சாலை புறம்போக்காக இருந்தது. வழக்கு சொத்து கிராம நத்தமாக இருந்தது என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் SLR நகல்

நான் வைத்துள்ளேன். நான் வைத்திருப்பதாக சொல்லும் SLRல் வழக்கு சொத்து என்னவாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் நத்தமாகதான் உள்ளது. SLR ஆவணத்தில் உள்ள வழக்கு சொத்தின் பைமாஸ் எண் சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எனது பூர்வீக சொத்து இல்லை என்றால் சரிதான்.

19. வழக்கு சொத்தை நானோ என் மனைவியோ கிரையம் வாங்கவில்லை என்றால் கிரையம் வாங்கவில்லை. நத்தம் என்பதால் வீடுகட்டி பட்டா பெற்றோம். பிரதிவாதி அ.வ.எண்.73/2015ஐ என் மனைவிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அ.வ.எண்.73/2015ன் வழக்கு சொத்து புல எண்.184/21 என்றால் சரிதான். அவர் சாலை புறம்போக்கின் மீது வழக்கு தாக்கல் செய்தார். அ.வ.எண்.73/2015ல் என் மனைவி எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரையில் புல எண்.184/21ல் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் தகராறு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார் என்றால் புறம்போக்கு இடத்தில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும் புல எண்.184/22ல் கட்டக்கூடாது என்றும் சொல்லியிருந்தோம்.

20. தான் கட்டியுள்ளது புல எண்.184/22ஆ அல்லது புல எண்.184/21 என்று தனக்கு தெரியவில்லை என என் மனைவி அந்த வழக்கின் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. புல எண்.184/21ல் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னதால்தான் முன் வழக்கை நடத்தவில்லை என்றால் எங்கள் இடத்தில் 7 அடி ஆக்கிரமிப்பு செய்ததற்கு ஆட்சேபணை இல்லை என்று நாங்கள் அந்த வழக்கில் சொல்லவில்லை. இந்த வழக்கில் பிரதிவாதி அமாவாசை என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் சரியாக படிக்கவில்லை. நாங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போது ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று கூறிதான் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் ஆக்கிரமிப்பு செய்தார் என்றுதான் வழக்கு தாக்கல் செய்தோம்.

21. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் அமாவாசை வழக்கு சொத்தில் கடைக்கால் போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தை நீதிமன்ற ஆணையர்தான் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அதன்பின்பு மீண்டும் வழக்கு சொத்தை நிலஅளவையருடன் அளவீடு செய்ய நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அம்மனு தள்ளுடி ஆகிவிட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு விசாரணை பட்டியலுக்கு எடுத்த பின்பு மீண்டும் நிலஅளவையருடன் அளவீடு செய்ய நீதிமன்றத்தில் மனுவும் தாக்கல் செய்து அம்மனு தள்ளுடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அதன்மீது நாங்கள் தாக்கல் செய்த சீராய்வு மனு தள்ளுடி ஆகிவிட்டது என்றால் சரிதான்.

22. வழக்கு சொத்தில் உள்ள கட்டிடத்தை இடிக்க இடைக்கால மனு தாக்கல் செய்து அம்மனுவும் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ 7 ஆவணத்தில் 29.11.2013ல் அம்மா திட்டத்தின்படி பட்டா கொடுக்கப்பட்டதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஊரில் அனைவரும் பட்டா கேட்டு மனு செய்தார்கள். நானும் செய்தேன். அதில் அதே பட்டா எண்ணான 519ல் எனக்கு இந்த பட்டா கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ 7ன்படி எனக்கு புதிய பட்டா எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் பழைய பட்டாவேதான் புதியதாக கொடுத்தார்கள். வா.சா.ஆ 6, வா.சா.ஆ 7 இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 7 ஆவணத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரியின் முத்திரை இல்லை என்றால் கோபுர முத்திரை உள்ளது. மேற்படி பட்டாக்கள் போலியானவை என்று எதிர்வழக்குரையில் சொன்ன பின்பும் அவை உண்மையானவை என்று நிரூபிக்க நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அவர்தான் போலி ஆவணங்களை உருவாக்கி எங்களை நீதிமன்றத்தில் நிற்க வைத்துவிட்டார். எங்கள் ஆவணங்கள் போலியானவை இல்லை.

23. எனது ஆவணங்கள் உண்மையானவையா என்று நிரூபிக்க வட்டாட்சியரை விசாரிக்க கோரி நாங்கள் தாக்கல் செய்த மனு தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது என்றால் அப்படி நாங்கள் மனு தாக்கல் செய்யவில்லை. தாவா A அட்டவணை சொத்து என் மனைவிக்கு உரிமையில்லாத சொத்து என்றால் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்து நாங்கள் சொல்வதுபோல் A அட்டவணையில் வரவில்லை என்றால் சரியல்ல. B அட்டவணையில் உள்ள சொத்து புல எண்.184/21ல்தான் வருகிறது என்றால் சரியல்ல. உண்மை விவரங்களை மறைத்து பல்வேறு குளறுபிடிகள் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் எங்கள் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)